சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை– புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – சத்துணவு மையங்களில் சமூக தணிக்கை மேற்கொள்வது – தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கத்தினை நியமனம் செய்தல் – ஆணையிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந4–1) துறை,

அரசாணை (வா) எண். 103

நாள். 23 .06.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, வைகாசி 9

9/7/2020.

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (ப) எண்.42, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 23.03.2020.

2. மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 21.03.2020,
3. சமூக நல ஆணையரின் கடித ந.க.எண்.11726/சஉதி–3/2019, நாள் 19.05.2020.

------

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஏனையவற்றுகிடையில், பள்ளிகளில் மதிய உணவிற்கான தேசிய திட்டத்தின் (National Programme of Mid Day Meal in school) கீழ் உள்ள மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுக் (Management, Monitoring and Evaluation)கூறுகளின் கீழ் சத்துணவு மையங்களை சமூக தணிக்கை செய்யும் பொருட்டு 2019-2020–ஆம் நிதியாண்டில் ஒரு சத்துணவு மையத்திற்கு ரூ.25,200/- வீதம் 100 சத்துணவு மையங்களுக்கு ரூ.25,20,000/- நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், சமூக நல ஆணையரால் இத்தொகை தமிழ் நாடு நிதி விதித் தொகுப்பு, விதி 99–ன் கீழ் தற்காலிக முன்பணமாக பெறப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மானியக் கோரிக்கையை 21.03.2020 அன்று தாக்கல் செய்து மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட பல்வேறு புதிய அறிவிப்புகளில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் 100 சத்துணவு மையங்களில் ரூபாய் 25.20 இலட்சம் செலவில் 2020–2021–ஆம் ஆண்டில் 'சமூகத் தணிக்கை மேற்கொள்ளப்படும்' என்று ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல ஆணையர் அவர்கள், மத்திய அரசின், மதிய உணவிற்கான திட்ட ஒப்புதல் குழுவின் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளில் ஊரக வளர்ச்சித் துறையின் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் செயல்படும் சமூக தணிக்கை அலகு வாயிலாக சத்துணவு மையங்களை சமூக தணிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் சமூக தணிக்கை சங்கத்தினை (Social Audit Society of Tamil Nadu) தொடர்பு கொண்டு சத்துணவு

தபிபா

மையத்தினை சமூக தணிக்கை செய்ய கோரப்பட்டதில் ஒரு சத்துணவு மையத்தினை சமூக தணிக்கை செய்ய தோராயமாக ரூ.25,185/- செலவினம் ஆகும் என மதிப்பீடும், சத்துணவு மையத்தினை தணிக்கை செய்ய தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கத்தினை, ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal agency) நியமித்து அரசாணை பெற்றுத் தருமாறும் கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

4. ஆகவே, சமூக நல ஆணையர் அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்களில் ஊரக வளர்ச்சி துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கத்தினை (Social Audit Society of Tamil Nadu) சமூக தணிக்கை மேற்கொள்ள நியமித்து ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

5. சமூக நல ஆணையரின் கருத்துருவை கவனமுடன் அரசு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, தமிழ்நாட்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் 100 சத்துணவு மையங்களை சமூகத் தணிக்கை செய்வதன் பொருட்டு ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு சமூகத் தணிக்கை சங்கத்தினை (Social Audit Society of Tamil Nadu) ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal agency) நியமனம் செய்து ஆணையிடுகிறது.

6. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் சமூக தணிக்கை என்ற தலைப்பின்கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.25,20,000-தை (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) கொண்டு 100 சத்துணவு மையங்களுக்கு செலவினம் மேற்கொள்ளுமாறு சமூக நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சோ. மதுமதி,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்,
சமூக நல ஆணையர், சென்னை – 15.
இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை–15
இயக்குநர், தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–15
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–8
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18
முதன்மை மாநிலக் கணக்காயர் (தணிக்கை I & II), சென்னை–18

நகல்:-
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத்
திட்டத் துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
நிதித்துறை, சென்னை–9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–2) துறை,
சென்னை–9
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//